ஓலை 135| ஓசை 258| ஆகஸ்ட் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## செக்கிழுத்த செம்மல் -வ.உ.சிதம்பரனார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

## பொருள்

வலிவு மிகுந்த யானைக்குக் குறிவைத்து, அந்தக் குறிதப்பினாலும்கூட அது, வலிவற்ற முயலுக்குக் குறிவைத்து அதனை வீழ்த்துவதைக் காட்டிலும் சிறப்புடையது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

**நிறுவனர்**

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

**ஆசிரியர்கள்**

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

**வடிவமைப்பு**

**ச.சூர்யா, அ.வில்சன்**

**அலுவலக முகவரி**

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நேரா நோன்பு சீரா காது!

பாவகை : வெள்ளொத்தாழிசை




மனமொத்தே இன்பத்தை மாய்த்துப் புலன்கள்
இனமொத் தியங்கிடாமல் எப்பயனும் வாரா;
மனமொத்து செய்தலே மாண்பு.

உடலிணைந்தே இன்பத்தை மாய்த்துப் புலன்கள்
தடம்மா றியங்கிடாமல் எப்பயனும் வாரா
அடக்கிமனம் செய்தலே மாண்பு.

நீருக்குள் இன்பத்தை மாய்த்துப் புலன்களின்
வேரும் இயங்கிடாமல் எப்பயனும் வாராதே;
நேருமன்பில் செய்தலே மாண்பு.




இலக்கணக் குறிப்பு:

மேலேயுள்ள மூன்று பாடலும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாக்கள். கலித்தளை கலவாமல் முழுக்க முழுக்க ஒரு பொருளின் மேல் வெண்டளையால் மூன்றடுக்காக அடுக்கி வந்ததால், இப்பாட்டினம் வொள்ளொத்தாழிசை எனப்படும். அதாவது, வெண்பாத் தளையொத்து வந்த தாழிசை என்பதைப் புணர்ச்சி நெறிப்படி (வெண்டளை + தாழிசை) வொள்ளொத்தாழிசை ஆயிற்று.

## பாவகை : நேரிசை ஆசிரியப்பா

எண்ணம் சொல்வதை
எழுத்தாய் ஆக்கும்.
கண்ணில் பார்ப்பதைக்
கவிதையில் விளக்கும்.
வண்ணக் காட்சியை
வகையாய்க் கூறும்.
எண்ணியே எழுத
ஏற்றமும் பெறலாம்
மண்ணில் நல்லதை
மகிழச் சொல்லும்.
தெண்மை சுட்டித்
தெப்பமாய் மிதக்கும்
வண்ணத் தாளிலே
வரையும்
உண்மை உள்ளிட
உயர்வைக் காட்டுமே.



கவிஞர் செ. கலைவாணி

# பொன்னிலா

மாற்றுத் திறனாளியாகப் பிறந்த போதும்
மங்கிடாமல் உயரம்தொடும் மாந்தர் பொன்னிலா !

திருநங்கை பிறப்பெடுத்த போதும் படித்து
சீரார்ந்த பணிஅமர்ந்திடும் தோழமை பொன்னிலா !

தாய்தந்தை சுனாமியில் இழந்த பின்னும்
தன்னம்பிக்கை யுடனே வாழ்வார் பொன்னிலா !

ஏழ்மையிலும் விடாமுயற்சி கொண்டே உயரம்
எட்டிபிடித்தே சாதிப்பார் எவரும் பொன்னிலா !

மனத்திறன் குறைந்திட்ட மக்கள் பெற்றும்
மனந்தளராமலே கல்விதரும் தாய்மை பொன்னிலா!



ஊழ்வினை எதிர்நின்ற போதும் வாழ்வு
ஓங்கிடவே வினையாற்றி வெல்வார் பொன்னிலா !

நாற்புறமும் போர்மூளும் காலம் தனியே
நடுநிலையாய் போர்தடுக்கும் தலைவர் பொன்னிலா !

அடிமைநாட்டில் விடுதலைக்காம் புரட்சி செய்தே
ஆள்வோரை விரட்டிடவே துணிவோர் பொன்னிலா !

பால்வினைச் சீண் டல்களினால் தளராமல் நீதி
சால்புமன்றம் நாடிவரும் மகளிர் பொன்னிலா !

கொடும் துணையாய் மாறிட்ட கணவர் தம்மால்
குன்றியிறவாது நல்வாழ்வு மீண்டால் பொன்னிலா !

வானத்திலே உலவிவரும் நாளும் வெண்ணிலா ;
வண்ணமேற்றே கிளர்ந்தெழும் புதுமை பொன்னிலா !

கவிஞர் ஆ. சீ. கந்தீன், திருவொற்றியூர் (சென்னை)

# குறிப்பறிதல்

**பா வகை: வெண்டுறை (ஏழடியில் வேற்றொலி வெண்டுறை)**

விழிக்கதிரும் பட்டவுடன் விரிகின்ற தாமரையாய் மலர்வேனே மைவிழியே
மொழியெதுவும் வேண்டாமே முகங்கண்டே விழியினிலே விளிப்பேனே
எழிலாக வாழ்ந்திடுவோம் என்னவளே என்றும்நீ மகிழ்வாயே
இழிவாக பேசினாலும் எழிலாக வாழ்ந்திடுவாய் கலங்காதே
அழியாத கோலமென அழகுடனே வாழ்ந்திடவே காத்திடுவேன் கயல்விழியே
பழியுரைக்கும் மாந்தருமே பாரிலுண்டு பயங்காதே
எழிலாகக் கரம்பிடிப்பேன் எவர்வரினும்
எதிர்ப்பேனே!



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# பசி

பசியை மிச்சம்
வைத்தேப்பிரிகிறது
ஒவ்வொரு பொழுதும்.

வேளைக்கு வேளை
தொடர்படிகளாய் நீண்டு
முடிவின்றி.

எதற்கும் தீர்வு
தேடலின்றி இல்லை.

உருவங்கள் வடிவங்களில்
வெவ்வேறாய் பிரபஞ்சத்தில்
எண்ணற்ற உயிர்கள்.

அதனதன்
தேவையின் பொருட்டே
பசியின் பட்டியல்.

எனினும்
எவ்வுயிர்க்கும் பாசாங்குகளும்
போலிகளுமற்றது பசி!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்



விழுகின்ற இலைகள்
மனதைக் கவர்கின்றன
பசுமை நினைவுகள்

##

இலைகள் உதிர்ந்ததும்
மறைந்து கொள்கின்றன
ஒற்றையடிப் பாதைகள்

##

நிலத்தின் குளிர்மை
இன்னும் அகலவில்லை
உதிர்ந்த இலை

##

நிலக் குளிரில்
மீண்டும் நனைந்து விடும்
உதிர்ந்த இலை

கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# வேள்வித் தீயில் வேகட்டும் சாதி

சாதிமத பேதமில்லை
புத்தகங்களில் படிப்பதற்கு மட்டும்தானா
இன்னும் மாறலே இதயங்களில் சாதிபேதம்

உள்ளுக்குள் புரையோடிய
சாதி இனவெறி மறையவில்லை
ஆண்டுகள் கடந்தாலும்
நவீனங்கள் பெருகினாலும் ஓய்வதில்லை

காதலிக்கும் பொழுது
இனமும் மதமும் தடையில்லை
யாரும் எப்போதும் தடை செய்வதில்லை
திருமண பந்தத்தில் மட்டும்
சாதியது தலைதூக்கிப் பார்க்கிறது



உடலை மட்டும் நேசிக்கும் ஈனப்பிறவிகள்
உள்ளத்தை பார்க்க மறுப்பது ஏனோ
காமமும் மோகமும் கூடிடும்
கயவர்களின் இழிசெயல்களே

ஆசை வார்த்தையில் வீழும்
அப்பாவி இளமை இதயங்கள்
ஆணவத்தை கையிலெடுத்து
கொலைபாதகம் செய்திடும் சந்தர்ப்பவாதிகள்

சட்டம் தண்டித்தாலும்
எளிதில் விடுதலையாகும் கொடுமை
வேள்வித் தீயில் வேகட்டும் சாதி
மனமும் மாறிடுமோ காட்சியும் நனவாகிடுமோ

எதையும் ஏற்கும் பக்குவம் வந்திடுமோ
இச்சைக்காக இன்றி
இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி வந்திடட்டுமே
எண்ணங்கள் மாறட்டும் எழுச்சியும் உண்டாகட்டும்
சுயநலவாதிகளின் போக்குகள் யாவும்
வேள்வித் தீயில் வேகட்டும் சாதி என நினைக்கட்டுமே

அன்பு பெருகட்டும்
ஆதரவு கரங்கள் நீளட்டுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# கயவராட்சி



அழுக்கு அறுக்கும் வினைஞர்
அக மறுத்து அல்லவை அளித்த
அந்தகன்.

கழிவு அகற்றும் கருமர்
கண்ணீர் துடைக்க மறுக்கும்
கயவராட்சி.

புழுதி படிந்த சாலை
பொலி விழந்த மாநகர்
பொல்லாங்கு இழைத்த பகடி.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# தோழியின் பேரன்பு

நான் தினமும் உன்னிடம் உரையாடுவதில்லை.
ஆனால் உன்னை நினைக்காத நொடியேயில்லை.
உன் அன்பிற்கு எல்லை இல்லை.
என் பாசப்பிணைப்புக்கு உருவம் இல்லை.
எப்போதும் உன்னையே தொந்தரவு செய்வேன்.
ஒருபோதும் யாவருக்கும் விட்டு கொடுக்க மாட்டேன்.
என் மூச்சு காத்து இருக்கும் வரை.
உன்னை விட்டு விலக மாட்டேன்.
பாசம் என்னும் வேலியில் மாட்டிக்கொண்டேன்.
மறுக்க வழியில்லாமல்.
விடியலாய் தோன்றிய உன் நினைவை.
வீரமாய் கையாளுகிறேன்.
மாறாத உந்தன் அன்பிற்கு கட்டுப்பட்டவள் நான்!



கவிஞர் மோனிஷா

# எண்ணங்களின் தாத்பரியம்

கண்கள் இரண்டும் சொட்டும் நீரிலே
வரிகள் இல்லை எழுத வார்த்தைகளை
பத்திரம் செய்து கொள்கிறேன்.
உணர்வுகளை சங்கமம்
செய்யத்தான் துடிக்கிறது எந்தன் மனமே!
ஆனாலோ மானம் பார்த்து பேசும்
வார்த்தை இல்லை அதுவன்றோ?
காரணம் தேடித்தேடி
காலம் போய் தான் முடிகிறதே!
சுடுகாடு வரை இடுகாட்டில்
வாழப் பழக நினைக்கின்றாய்.
தேவை வேண்டி பழகும் பலரிடமும்
பத்திரம் செய்து கொள்
உன் நாவெனும் அந்த சூட்சமத்தையே!
சூழ உலகம் சுற்றி உன்னை கூப்பிடுமே;
சூழ்ந்து உன்னை வைத்து வேடிக்கை நாடகமாடுமே!
பார்த்து நகர்ந்து கொள்;
நீயும் ஒரு நாள் வசப்படலாம்.
உலகம் என்பது மாயையடா;
அதுவே அவன் போதனையடா.
மறுஉலக வாழ்வை நினைத்தாயென்றால்
உனக்கே இல்லை இங்கும் ஒன்றுமே!
ஆட்டி படைத்த மாளிகையை
விட்டுச் செல்வான் மனிதன் ஒருநாளே!
நிலையில்லா இவ் வாழ்வியலே
இன்றே சரி பார்த்துக் கொள்
உன் எண்ணங்களையே!
அனுபவம் கூற நானிங்கு மகான் ஒன்றுமில்லை.
கவிதை எழுதும் போக்கில் வந்த
என் எண்ணங்களின் தாத்பரியமே!



கவிஞர் ஸபா நளீர், குருந்துகொல்ல (கண்டி.)

# அப்பாவே அனைத்துமாகி

உன்னுயிர் நீர்த்து என்னுயிர் தந்தாய்,
உன்வாழ்வழித்து எனக்கொரு
வாழ்க்கை தந்தாய் நீயே

தாயுமாகி, தந்தையாகி
என்னை வளர்க்க
உன் உலகம் மறந்தாய்,
மறுமணம் ஒன்றும்
பெரிய குற்றம் இல்லை இக்காலத்தில்,
அதையும் துறந்தாய் எனக்காய்

உன்னவர்கள் அனைவரும்
உனக்கொரு வாழ்க்கை
வேண்டுமென்கையில்
என்வாழ்க்கையே என்னுதிரம் கொண்டு
விளைந்த என் சிட்டு என்றாயே
எங்கனம் சொல்வேன் உன்அன்பினை



ஆண்மகனுக்கும் கண்ணீர் உண்டு என்று
நான் பசி கொண்டு
தாய்பால் கேட்டு அழுகையில்
நீயும் என்னோடு சேர்ந்து கரைந்தாய் என்று
பாட்டி கூறுகையில் அறிந்தேன்
உன் அன்பின் உத்மத்தத்தினை

உன் அன்பிற்கு விலை உண்டோ
என்று கேட்கையில் நெஞ்சுயர்த்தி சொல்வேன்
என்னுயிரயே உன் காலடியில் வைத்தாலும்
தீராது என்கடன்

உன் பாசத்திற்கு
ஏழேழுஜென்மம் எடுத்தாலும்
உன் பாசத்திற்கு விலை என்ற ஒன்று
இவ்வுலகில் இல்லையம்மா

கவிஞர் என். ரிஷானா ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

# கடவுள் வாழ்த்து

1. எழுத்துகளில் அகரம் முதன்மைப் பிறப்பு
செழித்து நிற்கும் உயிர்களுக்கு
ஆதிபகவனே நனிசிறப்பு.

2. பேரறிவுடைய கடவுளைத் தொழவில்லை எனிலே
ஆறறிவு பெற்றிருந்தும் பயனிலை மண்ணிலே

3. நெஞ்சத் தாமரையில் அமர்ந்த இறைவா!
கொஞ்சமும் மறவாத நிலையைத் தருவாய் நிறைவாய்

4. இடரினும் உறுநோய் தொடரினும் துணிந்து
விருப்பு வெறுப்பற்ற உன்பாதம் பணிவேன் இறைவா

5. இறைவன் அருளை நினைப்போர்க்கு எப்போதும் பகலே
இறையருளால் நல்வினை தீவினை சேர்க்காதே இருளே

6. ஐம்புலம் முடக்கு இறையை இதயத்தில் அடக்கு
கைமேல்பலனாய் வலம் வருவாய் எடுப்பாய்.

07.ஒப்பிலி அப்பன் இறைவனால் மனம் ஆறிடும்
உப்பைக் குறைக்காமல் தின்றாலே
தொப்பையே உன்நிலை கூறிடும்



8. திருவடியை நினையாமல் ஓரடியும் வையாதே
பெருவடியின் நினைவு மறந்தால் உலகே உய்யாதே

9. எட்டுக்குணத்தான் திருவடிகளைப் பணிந்து போற்றுவோம்
விட்டுவிடின் கேளாச் செவியாய்
உன்னை உலகோர் தூற்றுவர்

10. திருவடிகளை அடைந்தவர் பிறவிக் கடலை நீந்துவர்
பருவத்தால் மகிழ்பவர் துறவிலும் இருளை ஏந்துவர்

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# உன்னைத் தேடு!

உனக்குள் இருக்கும்
உன்னைத் தேடு.
உச்சங்கள். தொடவே
உதயங்களை நாடு

வலிகள் ஆயிரமே
வல்லினமாய் மாறிடு
வசவும் துக்கமும்
வரையறைகளிடமிருந்தே
துரத்திடு

வானமும் ஏறிடலாம்
விண்மீனும் தொட்டிடலாம்
வாள் எடுக்காமலே
வாழ்வை வசப்படுத்தலாம்



ஏணியில் ஏற்றிடு
ஏழைகளுக்கு உதவிடு
ஏகலைவனாய் மாறிடு
ஏட்டறிவைத் தாண்டிடு

உறுதியாய் உழைத்திட
உள்ளத்தில் உற்சவமெடு
உலகம் போற்றும்
உன்னதனாய் மாறிடு

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பெண்பார்க்கும் படலம்

மங்கையிவளின் மணம்வீசும் பருவம் தொடங்கியது
மனமெங்கும் கனவோடு பரவசம் தொடங்கியது
மக்குப் பெண்ணிவள் அறிவாளோ உலகநிலை
மனவேதனைக்கு ஆரம்பமே பெண்பார்க்கும் படலமென்று?

யார் யாரோ வருவார்கள் தினம்தினம்
வயிறார உண்டுவிட்டு நாவுகூசாமல் சொல்லுவார்கள்
குட்டையென்றும் நெட்டையென்றும் பெருப்பெமென்றும் ஒல்லியென்றும்
ஆயிரம் குறைகள் விதவிதமாய் கேள்விகள்
சொல்வதெல்லாம் சொல்லிவிட்டு கேட்பதெல்லாம் கேட்டுவிட்டு
இறுதியில் சொல்வார்கள் பிடிக்கவில்லையென்ற வார்த்தையை



பாராட்டி சீராட்டி படிப்பூட்டி வளர்த்தவள்
பொத்திப் பொத்தி ஒழுக்கத்தோடு வளர்த்தவள்
கதிகலங்கி மூலையில் கண்ணீரோடு வாடுகிறாள்
பூவான இவளை கசக்கியே போட்டனர்
பெண்பார்க்கும் இந்த கொடூர மனிதர்கள்

எள்ளி நகையாடும் ஊர் மக்கள்
உபதேசமென்று குத்திக் காட்டும் உறவுகள்
பரிதாபப் பார்வையாலே சோதிக்கும் நண்பர்கள்
பேதையிவள் மனமுடைந்து தலையணையோடு கரைகிறாள்

தனக்கானவனை கரம்பிடிக்க ஆசைபட்டது தப்பா?
கரைசேர்க்க நினைத்த பெற்றோரின் எண்ணம்தான் தப்பாகி போனதா ?
மொத்தத்தில் பெண்ணாக பிறந்ததுதான் தப்பானதா?
எப்போது திருந்தும் இந்த சமூகம்?
பெண் கண்ணீருக்கு முடிவு கிடைக்க

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# பயணங்கள்

இன்றைய பயணங்களை
தின்று கொண்டு இருக்கிறது
அலைபேசியின் குரல்கள்

ஜன்னலோர இருக்கைகள்
உடைந்து போனது
கைப்பேசியின் கலவரத்தில்

ஒவ்வொரு இருக்கையும்
அலைபேசியின் ஆளுமையில்
கிழிசலின் முகங்களாய்

கைப்பேசிகளின் உரையாடலில்
மௌனமாய் மனிதர்கள்
பயணங்களில்

எல்லா பயணங்களும்
தொடு திரையில் தொலையும்
சோகங்களாய்

இன்றைய பயணங்கள்
இணையத்தின் மடியில்
ரசனை இல்லாத நிமிடங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கண் விதுப்பு அழிதல்

## அதிகாரம் : 118

கண்காட்டிய தலைவனை
கண்டதால் நோய்கொண்டேன்.
மீண்டும் காட்டச்சொல்லி
கண்கள் அழுவதேனோ?

தலைவனைக் கண்டவிழிகள்
மகிழ்ந்து தவறிழைத்தது.
உணராது இக்கணம்
வருந்திடல்தான் ஏனோ?

காதலனை தானேகண்டு
காதல்வயப்பட்ட விழிகளின்று.
தானே அழுதுகொள்வது
நகைக்கத்தக்க செயலே.

அவன்கண்டு மகிழ்ந்தவிழிகள்
தீராநோய்கொண்டன இனிமேல்.
அழமுடியாதவாறு அதன்
நீரும் வறண்டுபோனதே.

கடலினும் பெருங்காமத்தை
தந்தவிழிகள் இன்று.
காதலால் தாமுமுறங்காது
கவலையில் துன்புறுகின்றனவே.

காமம்கொண்டு களித்ததால்
துன்பநோய் தந்தவிழிகள்.
தாமும்தூங்காது துன்புறுதல்
எனக்கு இன்பமே.



அவனைவிரும்பி இடைவிடாது
பார்த்தவிழிகள் இன்று.
அழுது வருந்துகின்றதால்
கண்ணீர் வற்றிப்போகட்டுமே.

உள்ளத்தில் காதலின்றியும்
உதட்டால் காதலுரைத்தாய்.
உள்ளதறிந்தும் என்விழிகள்
உனைக்காணவே விழைகின்றனவே.

அவனில்லாதபோது விழிகள்
தூங்காது நோய்கொள்ளும்.
உடனிருந்தும் தூங்காதேனோ
இடைவிடாது துன்புறுகின்றனவே.

பறையறையும் பண்புடைய
விழிகளுடையோன் அவனின்.
ரகசியத்தை இவ்வூரார்
தெரிந்துகொளல் எளிதே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

சிவம்

சித் ஸ்வரூபம்! சின் மயம்!
சிதாகாசம்! சிவ பிரம்மம்!
சாம்பசிவம்! சிவ லிங்கிதம்
சதாசிவம்! சிவபரம்! என்றே
சித்தத்தில் சிவனை,
சதா சிவனை! சதா
சிந்தித்திருக்க;
என்றும் சதா சிவம்!
இதிலும், அதிலும்.எதிலும்,
சிவமங்களம்! சிவமயம்!
இன்றும், என்றும்!



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# வைரஸ்

உச்சத்தில் ஊஞ்சலாடும்
உயிர் கொள்ளும் வைரஸே
உன்னை உலகிற்கு
அனுப்பியது யாரோ
உலகமே எதிர்த்துப் போராடும்
எமன் அவன் நீ



மனிதா நீ திரிந்தால் வீதியில் உன்னை
வீட்டினுள் அடைப்பான்
தொட்டுப் பழகிய உறவுகளை
தூரமாக பார்க்க வைப்பாய்
விட்டு செல்லும் உயிர்கள் அனைத்தும்
விலை மதிப்பில்லாதது

இடைவெளியானதே தற்போதைய வாழ்க்கை
தனித்திருந்து உயிர் காக்க செய்வாய்
தாய் நாட்டை விட்டுப் போக விடாது
முடக்கி விடுகிறாய்
அலை அலையாய் மக்களை
கொன்று குவிக்கவும் தயங்கமாட்டாய்

விண்ணை அளந்தவனும் மண்ணை அளந்தவனும்
உன்னிலிருந்து நலம் தேடி ஓட வைத்து விடுகிறாய்
உன்னை அழி க்க பல வழிகள் தேட செய்கிறாய்
மருந்துக்காக பணத்தை
வீண் செலவு செய்ய சொல்லுகிறாய்

உணர்ந்து செயல்படுவேன்
உன்னிலிருந்து காப்பேன் எனையே
நான் முழு முயற்சியுடன் இருப்பேன்.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், இலங்கை

# உன்னை உயிர்ப்பிப்பாயா?

உலகமும் உறவும் உனை ஏந்தாது
உனக்கு உன்னாலேயே பலம்
உன் உதாசீனம் உகந்ததல்ல உனக்கு
உன்னை உனக்காக நேசி
உன்னிலிருக்கும் உன்னை உயிர்ப்பிக்க உதவு
உனக்குள் உனை மதகிடாதே!

உலகில் உனக்களித்த வாழ்நாள் சிறிது
உவகையோடு உயிர் வாழு
உனை காக்க ஒருவர் உண்டெனில்
உலகில் இறைவன் ஒருவரே!
உன்னை உலகுக்கு காட்ட பலம்
உன் மனதில் வேண்டுமே!



உன்னாலன்றி உனக்கு தேறுதல் இல்லை
உன் மனதை பெலப்படுத்த!
உன் வாழ்வின் வெற்றியும் தோல்வியும்
உன் கண்விழிக்குள் கண்டதும் காணாததும்
உன் ஆழ்மன வலிகளும் சிந்தனைகளும்
உன் தீரா கனவுகளும் திட்டமிடலும்

உன் எதிர்கால பிரயாசமும் பிதற்றலும்
உன் நிறைவேறா கடமைகளும் கவலைகளும்
உனக்கு குறித்த காலம் நிறைவேறுமட்டுமே
உன் உடைமையும் உன் செல்வமும்
உன் சந்ததி காக்குமா அழிக்குமாவெனும்
உன் துயர் விட்டொழித்து உன்னில்
உன்னுயிர் வாழ உவகை கொள்!

உயிர் நீத்தார் வாழ்வார் பரதீசிலே
உன் காலம் நிறைவேறும் நாளிலே
உனை காக்க யாருளர் இப்புவியிலே
உன் காலம் உள்ளளவும் மகிழ்ந்திரு!
உயிர் நீக்காது உன்னை உயிர்ப்பிப்பாயா!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# நிலா முகம்

ஆற்று நீராய்
அடித்துக் கொண்டோடும்
வாழ்க்கைப் பயணம்!

எத்தனையோ நினைவுகள்
கல்லும் மண்ணும் கலந்து
சேர்ந்து பயணித்த காலத்தில்
சிட்டுக்குருவியின் சிறகசைப்போடு
அரிதாய் முத்தமிட்டுக் கொஞ்சிய
கெண்டை விழிகளின் புன்னகையை
நினைக்கும் போதே
நெஞ்சில் ஊறிய தேனாய்த்
தித்திப்பைத் தந்தவள் நீ!

துளிப் பன்னீர் தேங்குமளவு
நானத்தில் சிவந்த கன்னம்!
பாலாடை போல் பரவிய
செங்காந்தள் உதடு!
பிறையை எழுதிக் கொண்ட நெற்றி!
காற்றுக் குடியேறும் கூந்தல்!
புள்ளிமான் தோற்கடிக்கும்
சங்கீத நடை!
என் கனவுகள் ஒன்று கூடி
கைப்பிடித்துக் கூட்டி வந்த
சித்திரை நிலா முகம்!



காதல் சோலையில்
முகம் பார்க்க
நீ கனவு தேவதையாக
எழுந்து வந்த நாட்களின் ஞாபகத்தில்
தென்றலும் கொஞ்சம் இளைப்பாறிக் கொள்ள
இடம் கேட்கிறது!
மீண்டும் ஒரு முறை
இந்தக் காதல் பிறக்காதா என்ற ஏக்கத்தில்!

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# சுதந்திரக்காற்று

கல்வியும் மருத்துவமும்
கைக்கு எட்டாத தொலைவில்!
ஆட்சியாளர்களின் சூழ்ச்சி
லஞ்சமும் வறுமையும்
தலைவிரித்தாட!



கருத்து சுதந்திரம் என்ற பெயரில்
அடுத்தவரை இழிவுபடுத்தும்
அநாகரீகம்!
அரைகுறை ஆடையில் சுதந்திரம்
பெண்களிடம் காற்று வாங்க!

எங்கு போகிறோம் என்ற
இலட்சியமில்லா இளைஞர்களை
முன்னேற்றப் பாதையில்
தலைமை ஏற்று வழிநடத்த
தலைவன் இல்லாத நாடாக
தத்தளிக்கவா பெற்றோம் இந்த
தன்னிகரில்லா சுதந்திரத்தை?

அவரவர் தம் பொறுப்பை உணர்ந்து
நல்வழி நடந்திட அடுத்து வரும்
தலைமுறையினர் தன்னிறைவு அடைந்திட!
அன்று கிடைத்திடும்
சுதந்திரக் காற்றில் பட்டொளி வீசி
பறந்திடும் நம் கொடி!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# நம்பிக்கை



வாழ்வின் ஒருபகுதி வாழ்த்துமே நம்பிக்கை
தாழ்வை போக்கியே தரணியில் நிலைக்குமே
சொல்லில் வளர்ந்த சொர்க்க உறவாய்
வில்லாய் வளைந்து விந்தை புரியுமே

கொடுக்கும் அளவும் கொள்கையில் உயர்ந்தே
விடுக்கும் மனதை விருந்தாய் அழைக்குமே
அன்பான உறவும் அமைதியில் நிலைத்தே
துன்பம் போக்கி துயரையும் துடைக்குமே

கடலாய் பெருக்கும் கருணையின் எண்ணமும்
திடலாய் விளங்கும் தெவிட்டா இன்பமே
செல்வங்கள் சேர்க்கும் சிறந்த பண்பாய்
இல்லறம் சிறக்கும் இனிமை வளமே

கடமையான உணர்ச்சியில் கருணை நிறைந்தே
மடமை நீக்கி மகுடம் சூட்டுமே
பகலாய் உதிக்கும் பண்பட்ட நிகழ்வாய்
அகலாத அன்பாய் அமைதியில் நிலைக்குமே

சுற்றம் சூழ்ந்த சுகமான வாழ்வும்
ஏற்றம் காணுமே ஏணியாய் உயர்த்துமே
கவலை மறக்க கனவான நிகழ்வாய்
திவலை நீராய் திரளுமே உறவுமே

வசதி வாய்ப்புகள் வசந்தமாய் வந்தே
இசைந்து கொடுத்திடும் இன்முக குணமாய்
தோல்வி அகற்றி துயரையும் மாற்றவே
கல்வி கடலாய் கருத்தும் பெருக்குமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# நினைவில் நீ

நீ போன பின்னும்
பேசுகிறது நினைவின்
வழி சுவாச காற்றில் கலந்து.

தாலேலோ நீ தாங்க
நான் யாரோ கேட்குது நினைவும்.
சுகமற்ற ராத்திரிகள்
தூக்கமற்று புரலுதல் போல
எல்லா ராத்திரிகளும் கண்சிமிட்ட
கண்டேன்.

ஆராரோ நீ பாட
நான் கண்ணயர நீ வந்து போ
என்றது போல
தலைக்கோதிக்கொண்டது போல
நினைவெல்லாம் மீளுது
உந்தன் நினைவிலே.

நீ மட்டும் இப்போது
கணமுன் தோன்றி போவேன்
நானும் சாய்கிறேன்
நிம்மதி மூச்சு விட்டு.

எனதன்பை மொத்த உரிமை
எழுக்கொள்ள ஏனிந்த
இத்தனை தாமதிப்பு
காரணகாரியங்களுக்குள்
போட்டு குழப்பிக்கொண்டு
நேரமெடுக்கிறாயோ.



நானும் நாள் தோறும்
நீயாக வரவேண்டுமென்ற காத்திருப்பில்
உணர்வின் வழி
பிரார்த்தனைகளுடன் காத்திருக்கிறேன்.

அதிச பொழுதைப்போல
நீயும் நிதர்சனமற்று கிடக்கிறாயோ
தயவுதாட்சனையற்று நானும் உன்னோடு
முட்டிக்கொள்ள சண்டைக்கு
தயாராகியபடி இருக்கிறேன்.

வல்ல நாயனே
நான் கேட்பதெல்லாம் நலவென்றதை
நீயும் உறுதிக்கொண்டதை
கொடுத்தருள வேண்டுமே.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# நிழல்

தொலைவிலிருக்கும்
நிலவிற்கு தொடர்பு
கொண்டேன்
ஏனோ ,
அது தொடர்பு எல்லைக்கு
அப்பால் சென்று மனதை
வதைக்கிறதே,
மீண்டும் மீண்டும்
இணைய இணைப்பை
தொடர்ந்தேன்
தொடர்ந்துக்கொண்டே
உள்ளேன்,
இதயத்தில் குடியிருக்கும்
உந்தன் நிழலிடம்!



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# நானும் நீயும் காத்திருக்கிறோம்



என் இன்ப துன்பங்களை
பகிர்ந்து கொள்ளும்
என் உலகமே நீதான் என்று
உனக்காகவே காத்திருக்கிறேன் நான்
உன் இன்ப துன்பங்களை
பகிர்ந்து கொள்ளும்
உன் உலகமே அவன்தான் என்று
அவனுக்காகவே காத்திருக்கிறாய் நீ
இந்த வாழ்க்கை என்னும் சூத்திரத்தில்
நம் நினைவுகள் அனைத்தையும் நிஜங்களாக்க
நம் நிஜங்கள் அனைத்தையும் நினைவுகளாக்க
நானும் நீயும் காத்திருக்கிறோம்.

கவிஞர் புன்னகை தீரன் இரா. சங்கர், ஈரோடு

# பிம்பம்



அவள் பார்த்த கண்ணாடியில்
தெரிந்த அந்த பிம்பம்
அத்தனை தன்னம்பிக்கையோடு இருந்தது

திடீர் திடீரென விழும்
சிலரின் வார்த்தை கற்கள்
அந்த பிம்பத்தை உடைக்க முற்படுகிறது

விரிசல் விழும்
கண்ணாடியைக் கண்டு
விஷமச் சிரிப்பு சிரித்துக் கொள்கிறார்கள்

நன்கு சிரித்துக் கொள்ளட்டும்

"அவர்களால் உடைக்க
முடிந்ததென்னவோ
அந்த கண்ணாடியைத் தான்
அதில் தெரியும் பிம்பத்தை அல்ல"

கவிஞர் முத்து மீனாட்சி

# கண்ணனே வா!

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்!
வெண்ணெய் உண்ட கண்ணனாம்!
மண்ணை தின்ற கண்ணனாம்!
குழலிசையாலே கூட்டத்தைக்
கூட்டும் கண்ணனாம்!
கோபியர் அனைவரையும்
ஆடவைத்த கண்ணனாம்!
பசுக்களை மேய்த்த
பால் முகம் கொண்ட கண்ணனாம்!
கோவர்த்தன மலையை
மழைக்காக தாங்கி பிடித்த கண்ணனாம்!
புல்லாங்குழல் ஊதியே
மாயாஜால புரிந்த கண்ணனாம்!
பூதனையை வதைத்தே
வெற்றி கண்ட கண்ணனாம்!
ஜல் ஜல் என்ற சலங்கை ஒலியோடு
ஆடி ஆடி அசைந்து வந்த கண்ணனாம்!
தாமரைக் கண்ணனாம்!
தேவகி நந்தனாம் ராதா ருக்மணி பிரியனாம்!
அர்ஜுனனுக்கு தேரோட்டியாக
மகாபாரத யுத்தத்திலே வந்த கண்ணனாம்!
அர்ஜுனனுக்கு கீதையை புகட்டிய கண்ணனாம்!
நம்மையெல்லாம் கீதை வழியிலே
வழி நடத்திக் கொண்டிருக்கும் கண்ணனாம்!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# ஆடு நனைய ஓநாய்க்கு என்ன அக்கறை?

உழைப்பை சுரண்டும் கூட்டம்
கூடி நின்று கொக்கரிக்கும்.
உரிமை கொண்டு பேசும்
உறவாடியே நடிக்கும்.

ஊதியம் ஏற்றிக் கேட்டால்
உணவை கொடுத்து மதிப்பிடும்.
பஞ்சமென பாட்டு பாடும்
பரதேசியென பிறரை ஏளனம் பேசும்.

வியாபாரத்தில் லாபம் எதிர்பார்க்கும்
விலை ஏற்றி கேட்டால்
விசுவாசத்தை விலை பேசும்.
சுற்றமென உடன் இருக்கும்
சுய நலமே உயர்ந்து நிற்கும்.

விடியலை மறக்கும் தொழிலாளி
விரக்தியிலே மனம் தள்ளாடி
போராட்டமே வாழ்க்கை என்று
வருவது போதுமென நிலையாகும்.

தொழிலாளியின் வியர்வை முதன்மையாகும்.
அவர்களுக்கு கை பொம்மை ஆகிவிட்டால்
காரியங்கள் நிறைவேறும்.
முதலாளித்துவம் முதலீடாகும்
முக்கிய புள்ளி என்றே பெருமிதம் கொள்ளும்.

உங்களின் மேன்மைக்காகவே
நாங்கள் பாடுபடுகிறோம்.
அதுவே, எங்களின் குறிக்கோள்
வாய்ப்பேச்சே வலிமையாகும்.

இங்கு, ஆடு நனைகிறது என்று
ஓநாய்க்கு என்ன அக்கறையோ?



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# சுதந்திரம்

விரும்பியதை ஏற்பதும்
விரும்பாததை மறுப்பதும்
அவளின் சுதந்திரம்

வேண்டியதை பெறுவதும்
வேண்டாததை புறக்கணிப்பதும்
அவளின் சுதந்திரம்

தேவைகளை நிறைவேற்றம்
தேவையில்லாததை மடைமாற்றம்
அவளின் சுதந்திரம்

கருத்துகளை கேட்டும் சொல்வது
கேட்காமலும் கூறுவது
அவளின் சுதந்திரம்

எப்போதும்
மௌனத்தின் அடையாளமாய் இருப்பதல்ல
மொழிகளை தீர்க்கமாய் உரைப்பதும்
அவளின் சுதந்திரம்



கவிஞர் ஞா. கோமதிதேவா, பண்ருட்டி

# மறவா விடுதலை மறவர் உயர்நிலை



பட்டொளி வீசிக் கொடிபறக்குது பாரு
பட்ட குண்டடிதனையும் நினைவு கூறு
வீர தமிழர் விதைத்த விதையே
விடுதலை அடைந்தது இந்திய கதையே

தொட்டில் பாடும் குழந்தை கேளிர்
தொலைந்து போன வீரர் கதையை
கொடியின் சிவப்பு நிறத்தில் பாரீர்
கொல்லப் பட்டோர் இதயத் துடிப்பை

வீரத் தமிழர் வாளைக் கொண்டு
விடுதலை எங்கள் உயிரே என்று
கவியின் மூலம் விடுதலைக் கண்டார்
கப்பல் மூலம் விடுதலை கண்டார்

எத்தனை எத்தனை தியாகம் செய்தார்
எதிர்த்த வெள்ளையர்கள் தலையை கொய்தார்
இன்றைய இளைஞர் நினைதல் வேண்டும்
இந்தியர் எங்கும் உயர்தல் வேண்டும்

இணைய வலையில் சிக்கிய மீனாய்
இருப்பது உந்தன் வீரச் செயலா
இணைந்தே கரங்கள் இருந்தால் போதும்
இந்திய தேசம் உலகை ஆளும்.

கவிஞர் பொன் சுரேஷ், கழனிவாசல்

# பூ மனமே வா

சாதி சமயமதைத் துறந்து
சமத்துவக் கோட்பாடை வழிநடத்தும்
பூ மனமே வா!

அடக்குமுறைதனை விடுத்து
அன்பு மட்டுமே உயர்ந்தது என்று
எண்ணிடும் பூ மனமே வா!

மேலோர் கீழோர்
உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும்
நிலைதனை மாற்றி
அனைவரும் சமமென
உணர்ந்திடும் பூ மனமே வா!

சின்னஞ்சிறார்களையும் மகளிரையும்
அன்பால் அரவணைக்கக்
காத்திருக்கும் பூ மனமே வா!

கையூட்டு பெறாது கடமை மறவாது
கண்ணியமது கட்டிக் காத்திடும்
பூ மனமே வா!

இருப்போன் இல்லாதோனுக்கு
உவகையுடன் கொடுக்க எண்ணிடும்
பூ மனமே வா!



கனவுலகில் சஞ்சரித்திடாது கனவையும்
நனவாய் மாற்றி சரித்திரம் படைக்க
எண்ணிடும் பூ மனமே வா!

அன்பும் அரவணைப்பும் பாசமும் நேசமும்
கருணையும் வல்லமையும் கொண்டு
அகிலமதில் வாழ காத்திருக்கும்
பூ மனமே வா!

பூ மனமதை பூச்செண்டுகளால் சுற்றி
சுகந்தமான நறுமணமதில் வரவேற்க
காத்திருக்கிறோம் பூ மனமே வா!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மயிர்



உயிரினங்களுக்கு
அளிக்கப்பட்ட
முதல் ஆடை
ரோமம்!

குளிர் தேசத்தில்
மாக்களுக்கும்
மக்களுக்கும்
இயற்கை அளித்த
இதமான போர்வை!

மர்ம தேசத்தை
கருமையால்
நிரப்பி
மானம் காப்பது
மயிர்!

மயிர் தேகத்தின்
பெருமை
உடல் விட்டு
நீங்கினால்
சிறுமை-இந்த உவமை
மானிட மயிருக்குத்தான்!

தட்ப வெப்பத்தை
தக்கவைக்க உதவுகிறது
ஆட்டு தேகத்தில்
அறுத்தெடுத்த
கம்பளி மயிர்!

சமணர் சாலை
சுத்தமாக்கி
உயிர் காக்கும்
மயிலின் மயிர்!

யாழின் வில்லாகி
இசை மீட்டும்
குதிரை மயிர்!

வண்ணம் குழைத்து
எழில் சித்திரம்
தீட்டும்
அணிலின் மயிர்!

கணையாழியில்
நுழைந்து
அணிகலனாகும்
யானை மயிர்

கவிஞர் கவி. சுகிரத்னம் (இர. தியாகராசன்), சென்னை 19

காரிருள்
கிழித்து
தூரத்தில்
ஒரு வெளிச்சம்

ஏதோ ஒரு
புத்தகம்
வாசிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# வண்ணத்துப் பூச்சி!

கண்கவரும் வண்ணங்களில் பறந்திடும் வண்ணத்துப்பூச்சிகள்
வனவளம் காப்பதில் இன்றியமையாப் பங்காற்றும்!
குறுகிய காலமே இவ்வுலகில் வாழ்ந்தாலும்
சிறியவர், பெரியவர் பேதமின்றி அனைவரின்
உளம்கவரும் இயற்கையின் பெருங்கொடை உயிரியாகும்!
உள்ளிருக்கும் தேனை பூக்களிலிருந்து உறிஞ்சி
உயிர்வாழும்! சூரிய வெப்பத்தாலும் சூடாகா
இறகுகளைக் கொண்டிருத்தல் இயற்பியல் அதிசயம்!
இதற்கு உறுதுணையாய்த் திகழ்வது,உயிரற்ற
செதில்களைக் காட்டிலும் உயிருள்ள பூச்சிக்குருதியைக்
கடத்தும் நாளங்களே ! இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட
வகைகளுண்டு வண்ணத்துப் பூச்சிகளில்! பனிக்காலத்தில்
அடர்ந்தமர இலைகளின் பின்னால் வாழ்ந்திருக்கும்!
அடைமழைக் காலங்களில் இடப்பெயர்வு நிகழ்ந்திடுமே!
வியப்பளிக்கும் வகையினிலே வெகுதொலைவு பறந்து
வலசை செல்லும் வண்ணத்துப் பூச்சிகளும்!
முட்டை, குடம்பிநிலைப்புழு, உறங்குநிலை கூட்டுப்புழு
விடுவித்து வெளியேறி சிறகடிக்கும் பூச்சியென
அடுத்தடுத்து நான்கு நிலைகளுண்டு இதன்வாழ்வில்!
முட்டையிடுவது பெரும்பாலும் நச்சுச் செடிகளின்
இலைகளில்தான்! பல்வகை வண்ணங்களில் பறந்துதிரியும்
இவைகளை பறவைகள் வேட்டையாடி உண்பதில்லை!
ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் இவற்றிற்கு
இனப்பெருக்கக் காலங்கள்! இணைந்தவுடன் ஆண்பூச்சி
இன்னுயிரை நீத்திடுமாம்! இதுவும் விந்தையன்றோ?
சூழல்காக்கும் வண்ணத்துப் பூச்சிகளைத் தவறாமல்
குழந்தைகளுக்கு அறிமுகம் செய்திடுவோம்! தலைமுறைகள்
தழைத்தோங்க விழிப்புணர்வை ஊட்டிடுவோம்! பல்லாயிரம்
ஆண்டுகளாய் நம்முடன் இணைந்திருக்கும் இவ்வினத்தை
அழியாமல் காத்திடுவோம்! வனவளங்களை மீட்டெடுப்போம்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# நட்பு

நம்பிக்கை தருவது நட்பு
நேசத்தின் ஆழம் புரிய வைக்கும்

உயிர் வாழ வைக்கும் உறவு
தூர இருந்தாலும் தேடி வரும் நட்பு

நீடிப்பு நிரந்தரம் அன்பென்ற ஒன்றுக்கு
இதயம் அடங்கும் என்றால்
அது நட்புக்காக தான் இருக்கும்

நட்பில் விரிசல் ஏற்படும் - பின்
நிலையில்லாமல் அதுவே மாறும்

நண்பன் இல்லா இடத்தில்
அவனை விட்டுக் கொடுக்காதிருக்கும் நட்பு

நினைவுகளோடு உறவாடும்
உன்னத நட்பு கிடைப்பதே சிறப்பு.

வேஷம் இல்லாத நேசம் கொண்ட
நட்பே உயர்வு தரும்

எண்ணங்களுக்கு மரியாதையை
தரவல்லது நட்பே

நட்புக்கேது இலக்கணம்



கவிஞர் முர்ஷிதா ஹபீப், இலங்கை

உணவை தவிர
அனைத்தையும் வெறுப்பது
ஏழைத்தனம்
***

கடவுள்தான் உன்னை படைத்தான்
இறுதியில்
அவனிடமே நீ செல்வாய் பார்
***

வேலியில் போன ஓணான் கதையை
இப்படியும் கூறலாம்
எலி உணவை பகிர கீச்சிட்டு
பூனையிடம் மாட்டிகொண்டதாம்
***

விந்தை உலகு
விந்தால்
உலகு
***

கோபத்தின் விளைவை கூறுகிறேன்
கேளுங்கள்
மாடு கண்ணாடியை முட்டி
முகத்தை கிழித்து கொள்வது
***

நம்மை
இங்கிருந்து எங்காவது
இழுத்து செல்லும் விசைதான்
இசை
***

அவரவருக்கென்ற வாழ்க்கை முறை உள்ளது
அதுவே
அவர்களை சமூகத்தில் அடையாளப்படுத்தி கொள்கிறது
***

இருண்ட பின்
எனக்கான வெளிச்சம் போதும்
என்பவன் நான்
***

கோபத்தை
எரிக்கும் சக்தி
குழந்தைகளுக்கு அதிகம்
***

உழைத்து உண்பவன் தொழிலாளி
உழைப்பவனை உண்பவன் முதலாளி
***

உழைத்து உண்பவனை விட
உழைப்பவனை உண்பவன்
அதிகம் உள்ளனர் உலகில்



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# சுனாமி

மழையும் வெள்ளமும்,
சுனாமியும் சூறாவளியும்,
இயற்கையாக மட்டுமல்ல,

சில மனிதர்களாலும் ஏற்படும்.
உள்ளங்களில்!!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தேனீர் காதல்



அந்திமழை
சன்னலோரம் அமர்ந்து
மழைத்துளிகளை
ரசிக்கிறேன்

ஈரக்காற்று
ஆக்ரமித்ததில்
உடலும் உள்ளமும்
புத்துணர்ச்சியானது

இலைகளில் விழும்
மழைத்துளிகளால்
ஆட்டம் போட்டது
செடி கொடிகள்

மழைத்துளிகளை
சில்லரைக்காசுகள் போல
தெறிக்கவிட்டது
தார்ச்சாலை

சூரிய வெளிச்சம்
மனிதர்களையும்
வாகனங்களையும்
மெருகூட்டி அழகாக்கியது

கைகளில்
மிதமான சூட்டில்
தேனீர் கோப்பை
அப்படியே
மறக்காமல் நம் காதல்!

கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# ஆசிரியர் போற்றிப் பா

முத்தென மிளிர்ந்து
மித்திரர்கள் புடைசூழ
வித்தைகள் பல் கற்ற
இத்தரை சூரியன் நீர்!

ஆயிரம் பிறை காண
உம்மைப் பாயிரம் பாடி
வாழ்த்துகிறோமே!

நீர் எமக்கு
ஊட்டிய கல்வியும்
காட்டிய நெறிகளும்
மாட்டியதளையினின்று
மீட்டிய மார்க்கங்கள்!

அன்பெனும் வித்தூன்றி
துன்பக்களை பறித்து,
இன்பப் பயிரை
நன்றாய் வளர்த்திட்டீர்!

ஏற்றம் கண்டிட
தேற்றிய சொற்கள்
ஆற்றிய வினைதனை
சாற்றவும் கூடுமோ?

மிகுபல செஞ்சொற்களால்
மகுடியாய்ப் பேசியே
வெகுளியை விலக்கி
தகுதியை உயர்த்தினீர்!



அலட்சியம் அறுத்து
இலக்கணம்செப்பி
பலபல பயிற்றி
கலகலப்பு ஆக்கினீர்!

மூர்க்கத்தை முட்டறுத்து
தீர்க்கமாய்ச் சிந்தித்து
பார்போற்ற பயிற்றுவித்து
பேருவகை தந்திட்டீர்!

உம்மை
ஆழியும் வந்தே
நாழிகை கண்டு
ஊழி உள்ளளவும்
வாழியென வாழ்த்தும்!

எங்களின் ஆயுளும்
உங்களைச் சேரட்டும்!
அங்கமாய் இருந்தே
அரவணைத்திடுகஐயனே!

கவிஞர் திருமதி. ச. வாணி பிரபு, புதுச்சேரி

# பூனையின் பாசம்

சிறுகதை

அழகின் அரசி செல்லம்மாள் இவள் வீட்டில் அழகான பூமியை வளர்த்து வருகிறாள். இவன் வழக்கம் பூமியின் பெயர் சாய்ராம் சாய்ராம் சுறுசுறுப்பாக விளையாடிக் கொண்டே இருக்கும்.



செல்லம்மாள் வீட்டில் ஹோட்டல் வைத்த உணவுகளை நியாயமான விலைக்கு விற்று ஒவ்வொரு நாளும் வாழ்ந்து கொண்டு வருகிறாள்.
சாய்ராம் தினமும் பால் சாதம் சாப்பிட்டு உறங்கச் சென்று விடும் இரவு பத்து மணிக்கு தான் இருந்திருக்கும் வீட்டிற்கு நல்ல செல்ல பிராணியாக வளர்ந்து வருகிறது. செல்லம்மாள் வீட்டு வேலைகள் முடித்துவிட்டு சாய்ராம் தூக்கி மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கிறாள். "பூனையின் பாசம் ஆழமானது"...அன்பு அழகானதை விட ஆழமானது சிறப்பானது.

ஒரு நாள் மாலை ஆறு மணிக்கு நல்ல மழை இடி,மின்னலுடன் மழை கொட்டுகிறது. மழையில் நனைந்துக்கொண்டு சாய்ராம் வீட்டிற்குள் வருகிறான். ஹோட்டலில் மழையின் காரணமாக டிபன் வாங்க யாரும் வரவில்லை அழகின் அதியம் ஆயிரம் கண்டேன். பூனையின் குரல் சத்தம் காதிற்கு இனிமையாக இருந்தது. மனிதன் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு ஐந்தறிவு மிருகங்கள் வலியும் வேதனையும் தாங்கிக் கொள்ள முடியாது.நமக்கு உணர்வு இருக்க மாதிரி மிருகங்களுக்கும் நம்மை விட அதிகமாகவே இருக்கிறது.சூரியன் உதிக்கும் முன்பே நான் கு மணிக்கு சாய்ராம் காலை விடிந்து விட்டது. இரவில் மழையில் நனைந்ததால் நடுங்கிக்கொண்டே அப்படி தூங்கி விட்டான்.


கவிஞர் மா. நந்தினி, சேலம்

# பூனையின் பாசம்

சிறுகதை

செல்லம்மாள் நேரமாக எழுந்து விட்டாள். வாசல் பெருக்கி சாணம் தெரிவித்து அழகான வண்ண கோலங்கள் இடுகிறாள்.சாய்ராம் வீட்டில் இருந்து வெளியே பசிக்காக கத்திக்கொண்டே இருக்கிறது. பாலை ஒரு கிண்ணத்தில் ஊற்றி வைக்கிறார் பாலை சாய்ராம் குடிக்கிறான்.
செல்லம்மாள் சமையலறையில் குட்டி போட்ட பூனை போல காலை சுட்டுக் கொண்டே இருக்கிறது.செல்லம்மா ள் செல்லம்மாள் சாய்ராம் தூக்கி கொஞ்சுகிறாள்.

பூனையின் பாசம் தனி தான் ஐந்தறிவியுடன் இறைவன் கொடுத்த செல்லப்பிராணி மனிதன் கூட சுயநலமாக வாழ்க்கை தேவைக்கு மட்டும் வாழ்கிறார்கள்.மிருகங்கள் அப்படி இல்லை அன்பு பாசம் அக்கறை நம்மை விட அதிகமாகவே இருக்கிறது ஏமாற்றாத ஒரே ஜீவன் செல்லப்பிராணி மட்டும்தான். செல்ல பிராணிகள் அக்கறையாக ஆசையாக பார்த்து வளர்ப்போம். செல்ல பிராணி துன்புறுத்தாமல் பாதுகாப்போம்.



கவிஞர் மா. நந்தினி, சேலம்

அலைபேசியை எடுத்து பேசிக்கொண்டிருந்த போது,"உள்ளே வரலாமா?" என்ற அழகான தமிழ்க்குரலைக் கேட்டு நிமிர்ந்த போது கேபின் வாசலில் அனாமிகா நின்று கொண்டிருந்தாள்.

"வா. வா... பார்த்து எவ்வளவு நாளாயிற்று. ஆம் எங்கிருந்து இவ்வளவு அழகாக தமிழ்ப்பேசக் கற்றுக் கொண்டாய்." மராத்தியில் கேட்டான் அரசு.



"சும்மா தமிழிலேயே பேசுங்கள். உங்களை விட எனக்கு நன்றாக தமிழ் தெரியும். ஆமாம் சிங்கப்பூர் போயிருந்தீர்களாமே."?

"ஆமாம். இரண்டு எக்ஸ்போர்ட் ஆர்டர்கள் கன்ஃபர்ம் பண்ண வேண்டியதிருந்தது. அத்துடன் ஒஸாகாவில் வேறு ஒரு செமினார் இருந்தது. அதையும் இரண்டு மூன்று கிளையண்ட்ஸ் பார்த்து விட்டு நேற்றுதான் வந்தேன்."

"ஏப்பா, ஜப்பனெல்லாம் போகிறீர்கள். ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?", "சொன்னால் கூட வந்திருப்பாயாக்கும்."

"கூட வா என்று சொல்லியிருந்தால் உங்களோடு நரகத்திற்கு கூட வரவே நான் தயார் அரசு."

அவள் சொன்ன பதிலில் தாக்குண்டவன் போல அவளை ஒரு நிமிடம் மௌனமாக பார்த்தான். தலையை இடதும் வலதுமாக அசைத்துக் கொண்டே "அனாமிகா வீண் கோட்டைகள் கட்டுகிறாய் என்று நினைக்கிறேன்?"

"எது வீண் கற்பனைக் கோட்டைகள் என்று நினைக்கிறீர்கள்?"

"நீ இவ்வளவு விரைவாக தமிழ்ப்படித்து.. என்னை இவ்வளவு எளிதாக உன் மனதில் வரித்துக் கொண்டது... ஒருவேளை நான் உன் மனதில் எனக்குத் தெரியாமால் ஏதாவது ஆசைகளை வளர்த்துக் கொள்ள அனுமதித்து விட்டேனோ?"

''அரசு உங்களை முதலில் பார்த்த உடனே என் வாழ்க்கைத் துணைவர் இவர்தான் என்று மனது சொல்லி விட்டது. அப்புறம் தான் மொழி, மதம், ஜாதி, பணம் எல்லாம் புரட்டடச் சொன்னது."

"ஒன்று மட்டும் நம்பினால் நம்புங்கள். ஒன்றுமில்லாத அநாதைப் பையனாக நீங்கள் இருந்திருந்தால் கூட கண்டிப்பாக என் வாழ்வின் எல்லாமே நீங்களாகத் தானிருப்பீர்கள்."

"பாரு, அனாமிகா. நீ வளர வேண்டியவள். வாழ்க்கையின் ஒவ்வொரு திசைகளையும் ருசிக்க வேண்டியவள். நான் என் சுய முயற்சிக்காக ஓடிக்கொண்டிருக்கிறேன். என்காலில் நின்று கொடி கட்ட வேண்டும் என்ற ஒரே ஆதங்கத்திலே கட்டுத்தறிக் காளையாக அலைந்து கொண்டிருக்கிறேன்."

"இந்தச் சமயத்தில் என் வாழ்க்கையில் பெண் சகவாசம் என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விஷயம்."

"பார் காதல்கத்தரிக்காயெல்லம் தூக்கி வைத்து விட்டு என் காலில் நின்று கொடிகட்டிப் பறக்க முயன்று கொண்டிருக்கிற இந்த இடைஞ்சல் எல்லாம் எனக்குத் தேவையில்லை என்று நினைக்கிறேன்." , "சரி காத்திருக்கிறேன்." , "எது வரை?"

"சாகும் வரை... நரை விழுந்து கண்ணில் திரை விழுந்து ஞாபகம் என் மூளையில் உழலும் வரைக் காத்திருக்கத் தயார் அரசு."

"நீயும் மனதை...என் இதயத்தில் ... அதில் உள்ள உன்னைப் பற்றி எப்படிச்

"நீயும் மனதை...என் இதயத்தில் ... அதில் உள்ள உன்னைப் பற்றி எப்படிச் சொல்வது? அனுமான் மார்பைக் கிழித்து ராம் சீதாவைக் காட்டிய மாதிரி எனக்கும் முடியுமென்றால் கண்டிப்பாக அங்கே நீ உன்னைத்தான் பார்க்க முடியும்."

"பாரு, அனாமிகா. கொஞ்சம் கண்டிப்பாக சொல்கிறேன். நண்பனோட தங்கை என்ற முறையில் தான் சில நேரங்களில் உன்னிடம் கேலி பேசியிருக்கிறேனே ஒழிய கண்டிப்பாக உன் மேல் எனக்கு எந்தக் காதலோ... எதுவுமில்லை என்பது நிச்சமான உண்மை."

"உள்ளுக்குள்ளே ஒன்றை வைத்துக் கொண்டு வெளியே ஒன்றைச் சொல்கிறீர்கள் அரசு. மனதிலே கை வைத்துச் சொல்லுங்கள் என்னை நீங்கள் விரும்ப வில்லை என்று." அவளை அறியாமல் கண்ணீர் கரை புரண்டோடியது.

"கண்களைத் துடைத்துக் கொள் அனாமிகா. என் மனதில் அப்படி ஒரு எண்ணம் இருந்தால் கண்டிப்பாக உன்னிடம் சொல்லாமல் இருக்க மாட்டேன். அப்படி உன்னை என் மனம் விரும்பினால் அதைக் கண்டிப்பாக திறந்து காட்டுவேனே ஒழிய பூட்டி வைக்க மாட்டேன்."

"என்னதான் சொல்ல வருகிறீர்கள்?" திரும்பவும் பொங்கிய கண்ணீருடன் கேட்டாள் அனாமிகா.

"இப்போது என் நோக்கமெல்லாம் என் அப்பா அளவிற்கு என் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதுதான்". என அவன் முடிப்பதற்குள் அவள் அழுதுகொண்டே ஓடினாள்...

தொடரும்...

கவிஞர் இராஜகை நிலவன்

# வலியின் தேடலில்

## கட்டுரை

**முன்னுரை**

**வலி என்றால் என்ன?**

நாம் அதை இரண்டு வகையாகப் பார்க்கலாம்.

1. உடல் வலி - தோலில் ஏற்பட்ட காயத்தால் வரும் வலி.
2. உள்ளத்தின் வலி - நெஞ்சுக்குள் இடம் பிடித்த ஒருவரின் அன்பு, நம்பிக்கை, எதிர்பார்ப்பு உடைதலில் ஏற்படும் ஆழமான வலி.

உடல் வலிக்கு மருந்துகள் இருக்கலாம். ஆனால், உள்ளத்தின் வலிக்கு ஒரே மருந்து -ஆறுதல் தான் அது மனிதனுக்கு மனிதன் மாறுபடும் முக்கியமான சிலவை; புரிதல், அணைத்தல், எழுதுதல்தான்.

மனிதனாக இருந்தாலும், வேறு உயிரினமாக இருந்தாலும், வலியை அவர்கள் தங்கள் வழியில் வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் நெஞ்சைக் கிழிக்கும் வலி, அதுவே மிகப்பெரும், எடைமிக்க வலி.




இந்த தொடர், அத்தகைய ஆழமான வலிகளை வெளிக்கொணரும் ஒரு முயற்சி. வலியை வார்த்தைகளில் மட்டும் பார்க்காமல், உணர்வுகளின் எடுப்பில் சுமந்துகொண்டு, அதைப் புரிந்துகொண்டு, பரிவோடு அணையச் செய்வதே என் நோக்கம்.

இது என் தனிப்பட்ட பயணம் மட்டுமல்ல, ஒவ்வொரு வாசகரின் உள்ளத்தையும் பேசும், பொதுவான உணர்ச்சி பயணம்.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# வலியின் தேடலில்

கட்டுரை

வலியின் தேடலில்... நானும், நீங்களும்... நம்முள் ஒளிந்த உணர்வுகளும்.

**அத்தியாயம் 1 — கண்ணீரின் மொழி**
(சத்தமில்லா சாட்சியம்)

மனிதனாக இருந்தாலும், விலங்காக இருந்தாலும், ஒவ்வொரு உயிரும் வலியை உணரக்கூடியதே. தோலில் ஏற்பட்ட வலி .
அதை சமாளித்து அடுத்த கட்ட வாழ்க்கைக்குச் செல்லலாம். ஆனால், உள்ளத்தின் வலி. அது மனிதனின் செயற்பாட்டையே கேள்விக்குறியாக்கி, அடுத்த கட்ட நகர்வையே நிறுத்திவிடும். உடல் சோர்வால் இரத்த ஓட்டமே நின்றுபோவதைப் போல.

நம்முடன் பழகிய ஒருவரின் குற்றம் நாம் செய்யாத தவறை, ஈட்டுக்கட்டி திரித்து சொன்னால் - அவர்களின் துரோகம், நம்மை எரித்துவிடும்.
நம்பிக்கையை உடைத்த பிறகு, அவர்களை மனதிலிருந்து தள்ளி வைக்கவே தோன்றும். அவர்கள் உண்டாக்கிய நெஞ்சடைப்பு,
வெளிப்படாத மௌனத்தில் கண்ணீராக கரையும்.

நாம் நேசித்தவர்கள் - நம்மை தவறாக புரிந்து, வரம்பு மீறிய வார்த்தையால் தண்டித்தாலும், அல்லது தண்டிக்க நினைத்து பிரிந்து சென்றாலும்,
அந்த வலியை வார்த்தையால் வடிக்க முடியாது.
முறியடிக்கச் சொல்லப்பட்ட போலிக்கதைகளை, யாரால் தாங்க முடியும்?

எனவே, அத்தகைய பொய்களையும் துரோகத்தையும் காலத்திடம் ஒப்படைக்கவே வேண்டும். ஏனெனில், பொய்கள் ஒருநாள் அழியும். அப்போது அவர்கள் நம்மை உண்மையாக புரிந்துகொண்டால் - நாம் சத்தமில்லா சாட்சியமாக அவர்களின் உள்ளத்தில் நிற்போம்.

தேடலாகும்...

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# என் இனிய ஹைக்கூ

## வாசிப்பு அனுபவம்

ஆசிரியர் : மு.முருகேஷ் ; வெளியீடு : டி டி பப்ளிகேஷன்ஸ் சென்னை
பதிப்பு : டிசம்பர் 2019 ; பக்கம்: 144 ; விலை: ரூபாய் 150




கீழ்த்திசை பூமியான ஜப்பானின் இயற்கையின் அழகையும் ஜப்பானியர்களின் வாழ்வோடு கலந்த புத்த மத 'ஜென்'னையும் சேர்த்துக்குழைத்த கலவையே ஹைக்கூ என ஜப்பானின் மூவரி மரபுக் கவிதைகள் ஆனது. இயற்கையின் பேரழகையே உட்கருத்தாகக் கொண்ட ஜென் ஹைக்கூவின் அடி நாதமாக திகழ்கிறது. ஜப்பானிய மகாகவி பாஷோ ஹொக்கு எனும் பாடல்களை எழுதத் தொடங்கினார். அவையே காலப்போக்கில் ஹைக்கூவாக மாறி படைக்கப்படுகின்றன. மேற்குப் பகுதியில் சொல் மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கை இல்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பிய கவிதையிலே இல்லை.
ஜப்பானிலோ அப்படி இல்லை. வேண்டாத சொல் ஒன்று கூட சேர்ப்பது கிடையாது என்று ஜப்பானின் ஹைக்கூவை சிறப்பிக்கிறார் பாரதியார். காட்சிகளின் நேரடி பகிர்வு, கவிதையின் ஈற்றடியில் நமக்குள் உணர வைக்கும் சிறு மின்னதிர்வு என்ற உள்ளடக்கத்தோடு முழுமையான கருத்தை நமக்குள் படம் பிடிக்க வைக்கும் கவிதையாக மலர்கிறது ஹைக்கூ.

ஹைக்கூ தொடர்பான பல நூல்களை எழுதியவர் ஹைக்கூ பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கருத்தரங்குகளையும் பரவலாக நடத்தியவர் தமிழ் மொழியில் ஹைக்கூவின் வளர்ச்சியை அவதானித்து கவிஞர்களுக்கு சிறப்பானதொரு வழிகாட்டியாக வாழ்பவர் என்ற பெருமைக்குரிய மு.முருகேஷ் அவர்களின் இந்த ஹைக்கூ நூலில் 200க்கும் மேற்பட்ட கவிதைகள் இடம் பெற்று அழகு சேர்க்கின்றன.

கவிஞர் இளையவன் சிவா

## வாசிப்பு அனுபவம்

அகதிகளின் அவலம் தாய் நாட்டையும் தாய் மண்ணையும் பிரிந்து எங்கெங்கோ முகவரி அற்று அனாதையாகத் திரியும் அவர்களின் சோகம் முதுமையும் தனிமையும் கொடுக்கும் தவிப்பு பருவநிலை மாற்றங்களின் விளைவுகள் மழையின் மீதான மோகம் குழந்தைகள் மீதான பாசம் சுற்றுச்சூழல் சீர்கேட்டை உணர்ந்து துடிக்கும் தவிப்பு காணும் இயற்கை அழகியலுக்குள் தன்னை ஒப்படைத்துக் கொள்வது குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் கவனம் செல்லப்பிராணிகள் மீதான பிரியம் சுமைகளைத் துறந்தால் அடைந்திடும் வானமெனும் சொர்க்கத்தைக் காட்டும் வனப்பு இயல்பானவற்றில் தென்படும் அழகியலை கவிதையாக மாற்றிக் கொள்வது எளிமையான நிகழ்வையும் வலிமையான வரிகளால் அழகூட்டுவது என நூல் முழுக்க ஒவ்வொன்றும் நல் முத்துக்களாகவே ஒளிர்கின்றன.

வாழ நினைக்கும் நம்பிக்கை இருந்தால் தனிமையையும் வெல்ல முடியும் என்பதை பல்லி வழியே விடைதருகிறது இக்கவிதை.

இறுக மூடிய அறை
தனிமையைக் கேலி செய்தது ஒற்றைப் பல்லி

மனித மனங்களில் உணர்வுகள் என்பது அவர்களது காலச்சூழலைப் பொறுத்தே அமைகின்றன.இயற்கை அழகைக் காட்டிலும் பள்ளியின் பயணம் எல்லோருக்குள்ளும் அழுத்தத்தையே அதிகரிக்கச்செய்கிறது.

நேற்று ரசித்த அதே நிலா
இன்று பிடிக்கவில்லை விடிந்தால் பள்ளிக்கூடம்

வெறும் கல்லாலும் மண்ணாலும் உருவான வீடுகளை இல்லமாக மாற்றுவது பெண்களென்றால் அதை உயிர்ப்பித்து இன்பம் மகிழ்வு ஆசுவாசம் நிம்மதி என சொர்க்கமாக மாற்றிக் காட்டுவது மழலைகளின் வருகையிலாயே நிகழ்கிறது. மழலையின் கிறுக்கலற்ற வெற்றுச் சுவர் அங்கே வாழும் மனிதர்களின் மனங்களிலும் வெறுமையையே

விதைத்துவிடுகிறது.

கிறுக்கல்களற்ற வெள்ளைச் சுவர்
சொல்லாமல் சொல்கிறது குழந்தை இல்லா வெறுமை

அச்சத்தைத் தாண்டி வாழ்வதன் அவசியத்தை எறும்புகள் வழியே கூட கற்றுக்கொள்ளலாம்.

கடிக்கவே இல்லை
கழட்டிவிட்ட செருப்புக்கடியில் பதுங்கும் எறும்புகள்

மழையற்ற வறட்சி மனிதனின் பேராசைக்கு காவு கொடுக்கப்பட்ட ஏரி என பலவித பிம்பங்களை எழுப்பி விடுகிறது இக்கவிதை.

ஏரியில் கட்டிய மணல்வீடு கரைக்க வரவே இல்லை
மழை

மனிதப் பிணத்தை புதைப்பதற்காக தம்மையே தியாகம் செய்யும் மலர்ப்பிணங்கள் என்ற சொற்சித்திரத்திற்குள் நெடுநேரம் சொக்கிக்கிடந்தேன்.

மயானத்திலிருந்து
வீடு திரும்புகையில் வழியெங்கும் மலர்ப்பிணங்கள்

புத்தகங்களின் பிறப்பென்பது பிள்ளைகளின் தீண்டலுக்குத் தன்னை முழுமையாக ஒப்படைப்பது தானே.

குழந்தைகள் கிழிக்க கிழிக்கப் புதிதாகின்றன
புத்தகங்கள்

## வாசிப்பு அனுபவம்

இடர்பாடுகளைக் கண்டு ஒதுங்கியிராமல் எதிர்கொள்ளும் துணிவும் நம்பிக்கையும் வழிநடத்துகையில் இயற்கையும் நமக்குத் துணைநிற்குமல்லவா.

மதிய வெயில்
செருப்பின்றி நடக்கையில்
திடீர் மழை

செல்லப்பிராணிகள் மீதான பிரியம் சில சமயங்களில் அவைகளுக்கு ஏற்படும் இடையூறுகளில் தவித்துப்போய்விடும். ஆசையாக வளர்த்த சேவலே தனக்கு உணவாக மாறும்போது அவனது தவிப்பை வார்த்தைகள் முழுமைப் படுத்தி விடாது.

பல் இடுக்கில் நெருடும்
மாமிசத் துணுக்கு
ஆசையாய் வளர்த்த சேவல்

ஆசைகளை சுமைகளென ஏற்றிக்கொண்டேமிருந்தால் வானத்தை அடையும் திறனில் சுணக்கம் நேரலாம். சுமைகளைத் துறக்கும் மனநிலை உருவானால் உயரப்பறத்தல் எளிதாகிவிடும். ஏதோ ஒன்றில் தன்னை அடிமைப்படுத்திக்கொள்ளும் மனதிற்கு ஒற்றை இறகும் பாரமாகத்தான் மாறிவிடும்.

கவலையின்றிப்
பயணத்தைத் தொடரும் புறா உதிர்ந்தது ஒற்றை இறகு

கோலத்தின் அழகில் தன்னை மறந்து தன்வசப்படுத்திக்கொள்ள நினைத்து மழை எட்டிப்பார்த்து அணைத்துக் கொள்ளும் ரசனை அழகான சொற்சித்திரம்.

கவிஞர் இளையவன் சிவா

## வாசிப்பு அனுபவம்

வாசல் கோலத்தை
இழுத்துச் சென்றது
திடீர் மழை

பிள்ளையின் பசியாற்றும் அன்னை இங்கே பிற உயிர்களுக்கும் தயாராகிவிடும் தாய்மையை உணரமுடிகிறது.

அம்மா ஊட்டி விட
துப்பியது குழந்தை
பசியாறும் நாய்

பதாகைகள் ஒருகாலத்தில் ஆட்சிமாற்றத்திற்கே அடித்தளம் அமைத்த நிகழ்வு மனதிற்குள் வந்து போகிறது.

நிமிர்ந்து பார்க்கையில் காணவில்லை வானம்
எங்கும் விளம்பரத் தட்டிகள்

இயல்பான காற்றடித்தல் காரணமாக பூக்கள் நகர்தல் கவிஞருக்கு மட்டும் புரண்டு படுப்பதாகத் தெரிகிறது. காணும் காட்சிக்குள் ரசனையை விதைப்பதன் அழகே இந்த வரிகளாக ஒளிர்கின்றது.

மெல்ல வீசும் காற்று
புரண்டு படுத்தன
பூக்கள்

மாணவர்களின் மனதில் கல்வி விதைத்தல் என்பது அவர்களது எதிர்காலத்திற்கான பாதை காட்டும் கலங்கரை விளக்கமாக அமைய வேண்டும். ஆனால் இன்று வீட்டுப்பாடங்களும் பள்ளிக்கூட புத்தகங்களும் அவர்களுக்கு சுமையாகவே மாறிவிடுகின்றன இயல்பான உறக்கத்தை கூட அவர்களிடம் இருந்து பிடுங்கி எறியும் கல்வி முறை அவர்களை

## வாசிப்பு அனுபவம்

உறக்கத்திலும் நடுங்க வைக்கிறது..

தூங்கும் குழந்தை
அனிச்சையாய் அசையும் விரல்கள்
எழுதவில்லை வீட்டுப்பாடம்

ஒருபுறம் எதிர்காலத்தைக் கட்டமைக்கத் துடிக்கும் வாரிசு மறுபுறம் விபத்தில் மாட்டிக்கொண்ட தனது அவலத்தின் இயலாமை என உருக்குலைந்த தந்தையின் போராட்டத்தை அப்படியே நமக்குள் கடத்தி விடுகின்றன மூன்றே வரிகள்.

நெடுஞ்சாலைகளில் விரையும் வாகனங்கள் எப்போதும் அவரவர் வேலைகளை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. நின்று நிதானித்து சாலையை கவனிக்கும் மனநிலை யாருக்கும் வாய்ப்பதில்லை. மனிதர்கள் மீதான கருணையும் அன்பும் கால ஓட்டத்தில் மறந்து போகும் இன்றைய சூழலில் அடிபட்ட நாய்க்காக யார் நின்று வேதனைப்பட போகிறார்கள்?

அடிபட்டுச் செத்த நாய்
மீண்டும் மீண்டும் அடிபட்டது நெடுஞ்சாலையில்

வாசித்த அத்தனையும் முத்துகளாக இருக்கையில் நெஞ்சில் நிலைத்து யோசிக்க வைக்கும் சில வரிகளில் என்னை நான் நனைத்துக்கொள்ள இனிய ஹைக்கூ மழையாகிப்போனது.

கவிஞர் இளையவன் சிவா

# செக்கிழுத்த செம்மல் – வ.உ.சிதம்பரனார்

## கட்டுரை

### பிறப்பு



(வ.உ.சி) வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம்பிள்ளை 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாள் தமிழ் நாட்டில் தூத்துக்குடி மாவட்டம்.ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளை- பரமாயி அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். பின்னர் சிதம்பரத்திற்கு, நான்கு தம்பிகளும் இரண்டு தங்கைகளும் பிறந்தனர்.

### கல்வி

ஒட்டப்பிடாரத்திலுள்ள ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தொடக்கக் கல்வி பயின்றார் அரசாங்க அலுவலரான திரு.கிருஷ்ணன் வ.உ.சி.க்கு ஆங்கிலம் கற்பித்தார். பதினான்கு வயதில் ஒட்டப்பிடாரத்திலிருந்து தூத்துக்குடிக்குச் சென்று புனித சேவியர் பள்ளியிலும், கால்டுவெல் பள்ளியிலும் கல்வி கற்றார். திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியிலும் சேர்ந்து கல்வி கற்றார்.

இளமைப் பருவத்தில் தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர், வீரப்பெருமாள் அண்ணாவி என்னும் ஆசிரியரைப் பற்றிப் பெருமை பொங்க விவரிக்கிறார்.

"விழையும் நல் தமிழினைப் பழைய தன்முறையில்
விழைதர எனக்கு விளம்பிய ஆசான்
………,
தகவொடு தோன்றிய சான்றோன் பெரியோன்
வாய்மை என்பதே வாக்கினிற் கொண்டோன்
தூய்மை என்பதே தொடர்ந்த சிந்தையோன்
ஒழுக்கம் பலவும் உடையாப் புனைந்தோன்"

திரு அ.வில்சன், இதழாசிரியர்

என்றெல்லாம் எழுதிக்கொண்டே வருபவர், தினமும் கருட தரிசனம் செய்யாமல் அவர் தண்ணீர் கூடப் பருக மாட்டார் என்பதை,

" கருட தரிசனம் கண்டால் அல்லது
பருகான் நீரும் பத்துநாள் என்றாலும்;
வெண்ணீறும் மணியும் மேலப்பெற்ற
தண்ணிய அழகிய சரீரம் கொண்டோன்.
வயதோ நாற்பது வளரப் பெற்றோன்
பெயரோ வீரப் பெருமாள் அண்ணாவி" என்கிறார்.

பூசுவதோ திருநீறு. அணிந்திருப்பது உருத்திராக்கம். பயரோ வீரப்பெருமாள் அண்ணாவி. காண்பதோ கருட தரிசனம். சைவ வைணவ சங்கமமாய் வாழ்ந்திருக்கிறார் அந்த ஆசிரியர் என்கிறார்

## வழக்கறிஞர்

சிதம்பரனார் ஓட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் பணியைத் தொடங்கினார். இலஞ்சம் வாங்கிய ஏகாம்பரம் என்ற குற்றவியல் நீதிபதியின் மீது வழக்குத் தொடர்ந்து அவருக்கு தண்டனை பெற்றுத் தந்தார். மற்றொரு அதிகாரியான வாசுதேவராவ் இலஞ்சம் வாங்கியதற்காக ஊதியம் குறைக்கப்பட்டு பணியிறக்கம் செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தார். இப்படி சிதம்பரம் காவல்துறை பகைத்துக்கொண்டு வழக்கறிஞர் தொழில் பார்ப்பதை அவருடைய தந்தையார் விரும்பவில்லை. அதனால் தூத்துக்குடி சென்று வழக்கறிஞர் தொழில் பார்க்கும்படி சிதம்பரத்தைக் கேட்டுக் கொண்டதால் 1900- ஆம் வருடம் தூத்துக்குடி சென்றார்.

## திருமணம்

வ. உ. சி. யின் திருமணம் 1895 ஆம் ஆண்டு வள்ளி அம்மையார் உடன் நடைபெற்றது. வள்ளி அம்மையார் 1900 ஆம் ஆண்டு தலை பிரசவத்தில் இறந்து விட்டார். பின்னர் 8 செப்டம்பர் 1901 அன்று தூத்துக்குடியில்

## திருமணம்

வ. உ. சி. யின் திருமணம் 1895 ஆம் ஆண்டு வள்ளி அம்மையார் உடன் நடைபெற்றது. வள்ளி அம்மையார் 1900 ஆம் ஆண்டு தலை பிரசவத்தில் இறந்து விட்டார். பின்னர் 8 செப்டம்பர் 1901 அன்று தூத்துக்குடியில் மீனாட்சி அம்மாளை மறுமணம் புரிந்துகொண்டார். தன் முதல் மனைவி திருமதி வள்ளியம்மையார் மறைவின் போது தலைவர் வ.உ.சி. எழுதிய வெண்பாக்கள் தன்னிகரற்றவை.

## கப்பலோட்டிய தமிழன்:

சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு பங்குகள் சேகரிக்க வடஇந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும்போது, மும்பையில் தங்கியிருந்தார். அவரது மனைவி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தார். ஒரே மகன் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையிலிருந்தான். அதனால் ஒருமுறை ஊருக்கு வந்து செல்லுமாறு நண்பர்கள் கடிதம் எழுதினர்.

தேச சேவையை உயிர் மூச்சாகக் கொண்டிருந்த சிதம்பரனார், "எங்கும் நிறைந்த இறைவன் என் மனைவியையும், மகனையும் காப்பாற்றுவார். அவர் வலிமைக்கு முன் யான் வந்து ஆவது ஒன்றுமில்லை" என்று பதலளித்துவிட்டு கடமையில் தீவிரமாகிவிட்டார். அவர் மகன் இறந்துவிட்டார். ஆயினும் தன் பணியைக் கைவிட்டுவிட்டு வரவில்லை.

தனது இடைவிடாத முயற்சியால் சுதேசிக் கப்பல்களை ஒட்டிச் சாதனை படைத்துவிட்டார் வ.உசிதம்பரனார். அன்று முதல் 'கப்பலோட்டிய தமிழன்" என்று நாட்டு மக்களால் அழைக்கப்பட்டார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

### பாரதி "மாமா" நட்பு:

வ.உ.சி. சென்னைக்குச் செல்லும் போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வ.உ.சி. பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார். பாரதியார் ஒரு பெரும் புலவர். வ.உ.சி.யும் பாரதியாரும் அருகருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இருவரின் தந்தையரும் நெருங்கிய நண்பர்கள். மகாகவி பாரதியுடன் தன் தொடர்புகள் குறித்து 'வ.உ.சி. கண்ட பாரதி' என்ற நூலை எழுதினார். பாரதியாரை "மாமா" என்றழைக்கும் பழக்கமுடைய இவர்.

### சிறை வாழ்க்கை



09.03.1908-இல் தூத்துக்குடியில் அந்த விழாவில் வ.உசிக்கும் சிவாவுக்கும் பொதுக்கூட்டங்களில் பேசத் தடைவிதித்தது. இது சம்பந்தமாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த விஞ்சி என்பரைச் சந்திக்க இருவரும் சென்றபோது இருவரும் கைது செய்யப்பட்டனர். 09.07.1908- இல் சிதம்பரனார் கோவை சிறைக்குக் கடும் பாதுகாப்புடன் அனுப்பிவைக்கப்பட்டார்.

தலைவர் வ.உ.சி. க்கு சிறைவாசம் விதிக்கப்பட்ட செய்திகேட்டு அவர்தம் தம்பி வ.உ.மீனாட்சி சுந்தரம் பிள்ளை சித்தம் கலங்கினார். இதுபற்றிக் கேள்வியுற்று வருத்தத்தில் தலைவர் வ.உசி.பாடிய வெண்பாக்கள் நெஞ்சை உருக்குபவை.

"பகைவர்களின் அரணைக் கண்ணன் அழித்து மீண்டதுபோல உன் அண்ணன் மீள்வான் என்பதை மறந்தாயோ" என்று வருந்துகிறார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

"அண்ணன் பகைவர் அரணுள் அழிவனெனும்
எண்ணம் உனதறிவை ஏய்த்ததோ - கண்ணன்
பகைவர் அரண் புகுந்து பற்பல முன்செய்த
வகையை மறந்தனையோ மற்று" - என்பது அந்த வெண்பாக்களில் ஒன்று.

## சிறையில் பிறந்த நூல்கள்

ஆலன் எழுதிய 'As a man Thinketh' என்ற ஆங்கில நூலை 'மனம் போல வாழ்வு' என்ற நூலாக மொழி பெயர்த்தார்.
திருக்குறள் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

## தமிழ்ப்பணி

தேசிய விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட வ.உசி. சிறந்த தமிழறிஞராகவும் விளங்கினார். இலக்கண, இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும் பற்றும் அவருக்கு இருந்தது. சங்க இலக்கியங்களிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட காலத்திலும் தமிழ் பற்றோ தமிழ் நூல்களைப் படிப்பதில் ஆர்வமோ சிறிதும் குறையவே இல்லை. கடிதங்களைக் கூடத் தமிழ்பாக்களாக எழுதும் திறன் அவருக்குண்டு.

1918-ஆம் ஆண்டில் திருக்குறள் அறத்துப்பாலை மணக்குடவர் உரையுடன் வெளியிட்டார். ஓலைச் சுவடியிலிருந்த மணக்குடவர் உரையை முதன் முதல் நூலாக வெளியிட்ட பெருமை சிதம்பரனாரையே சாரும். இப்பதிப்பில் உவ.சி. திறம்பட சில குறள்களுக்குப் புதிய விளக்கம் அளித்துள்ளார்.

1910 ஆம் ஆண்டு தம்மைச் சந்திக்க வந்த இரு தமிழன்பர்களிடம் அவர் கூறியுள்ளவை திருக்குறள் மீது அவர் கொண்ட பற்றையே உணர்த்துகிறது. இச்செய்தி 'கர்ம யோகி' என்ற ஏட்டில் 1910 ஆம் ஆண்டு மார்ச் இதழில்

திரு அ.வில்சன், இதழாசிரியர்

வெளிவந்துள்ளது. அவையாவன:

திருக்குறளையடுத்து வ.உ.சி.யைக் கவர்ந்த நூல் தொல் காப்பியம். இந்நூலின் மூன்றாம் பகுதியான பொருளதிகாரத்தின் மீது இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. இவர் தம் தொல்காப்பியப் பதிப்பில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

தூத்துக்குடியிலிருந்து 'தமிழ் நேசனல்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையும் நடத்தியுள்ளார்.

### வ.உ.சியின் நூல்கள்

1. எனது பாடல் திரட்டு 2. மெய்யறம் 3.மெய்யறிவு 4. சுயசரிதை
5. எனது அரசியல் பெருஞ்சொல் 6. வஉசி, கண்ட பாரதி

### பதிப்பித்த நூல்கள்

1. திருக்குறள் அறத்துப்பால் (மணக்குடவர் உரையுடன்)
2. தொல்காப்பியம் (அகத்தினை இயல், புறத்திணை இயல்) (இளம்பூரணர் உரையுடன்)
3. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 4. தொல்காப்பியம் பொருளதிகாரம்
5. இன்னிலை

### உரை எழுதிய நூல்கள்

1. திருக்குறள் (அறத்துப்பால்) 2. சிவஞான போதம்

### மொழிபெயர்த்த ஜேம்ஸ் ஆலனின் நூல்கள்

1. அகமே புறம் (Gut from the Heart)

2. மனம் போல் வாழ்வு (As a Man thinketh) 3. வலிமைக்கு மார்க்கம் (The Path of Prosperity)
4. சாந்திக்கு மார்க்கம் (The way of peace) இவை தவிர பல்வேறு இதழ்களில் கட்டுரையும் எழுதியுள்ளார்.

## அமரரானார்

அரசாங்கத்தினால் வெஞ்சிறையில் அடைக்கப்பட்டு, வறுமையால் வாடி, வழக்கறிஞர் பட்டத்தையும் இழந்தார். பின்னாளில் ஆதரிப்பார் எவருமின்றிச் சிதம்பரனார், அல்லலில் உழன்றார். வறுமையின் பிடியில் சிக்கி வதைபட்ட சிதம்பரனார் 1936-இல் நோய்வாய்ப்பட்டு ஒரு மாதகாலம் படுத்த படுக்கையாகக் கிடந்தார். உயிருக்குப் போராடும் வேளையிலும் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரின் தேச பக்திப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார். "நாடு விடுதலை பெறுவதைக் காணும் பெருமை எனக்குக் கிட்டவில்லையே" என்று வருந்தினார். மருத்துவர்கள் பெரு முயற்சி எடுத்தும் நிலைமை சீராகாததால் கைவிட்டனர். நிலையறிந்த அவருடைய மனைவியும் மக்களும், உறவினர்களும் நண்பர்களும் கண்ணீர் வடித்தனர்.

இந்த நிலையில் 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ஆம் தேதி இரவு செக்கிழுத்த செம்மல் வ.உ சிதம்பரனார் உயிர் பிரிந்தது.



## நன்றி

தமிழகத்தின் தனிப்பெருந்தலைவர் - செவல்குளம் 'ஆச்சா' (புலவர் அ.சா. குருசாமி)
அறிவுக்கு ஆயிரம் கண்கள் - கலைமாமணி - மரபின் மைந்தன் முத்தையா

திரு அ.வில்சன், இதழாசிரியர்

## நாளை நமதே

# வெற்றி

# தள்ளிப் போகலாம்

# ஆனால்

# முயற்சி

# வீண் போகாது

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com